Tamilmanam International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed monthly academic research journal
ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
: https://doi.org/10.63300/tm12042026

Vol. 12 No. 04 (2026): September 2026, **p116-127** | Available online at: www.tamilmanam.in

Original Research Paper – Peer reviewed ✓

ழான் லுக் செவ்வியாவின் தமிழ்ச்செவ்வியல் பங்களிப்பு

Jean-Luc Chevillard's Contribution to Classical Tamil Studies

ஜெ. கார்த்திக்,
உதவிப் பேராசிரியர் (தமிழ்), மொழித்துறை,
இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை
karthikjeyapal98@gmail.com
https://orcid.org/*0000-0003-0291-3447*

J. Karthik*,
Assistant Professor (Tamil), Department of Languages,
Hindustan College of Arts and Science, Chennai
Email: karthikjeyapal98@gmail.com Tel:. +91 8124040375
ORCiD: *https://orcid.org/0000-0003-0291-3447.*

Article history
Received: 20-08-2026
Revised: 30-08-2026
Accepted: **25-08-2026**
Published on: 01-09-2026

*Corresponding Author
Email:
karthikjeyapal98@gmail.com

Abstract: This research paper examines the profound contributions of French scholar Jean-Luc Chevillard to Classical Tamil studies, focusing on his extensive work in Tamil grammar, historical linguistics, and classical literature. Chevillard's academic trajectory shifted toward classical Tamil grammar through his detailed investigation of the Collatikāram of Tolkāppiyam and Cēnāvaraiyar's commentary. Utilizing modern Western linguistic theories, historical linguistics, and comparative approaches, Chevillard analyzed core grammatical features including deixis, ideophones, ticai-c-col, Eluttatikāram, and Tamil metrics (Ceyyuḷiyal). His interdisciplinary methodology bridged traditional Indian commentary traditions with international linguistic frameworks, opening new analytical vistas for Tamilology. This study highlights Chevillard's critical role in advancing Classical Tamil research on global academic platforms, leading to his recognition with the Kalaignar Karunanidhi Semmozhi Tamil Award.

Keywords: *Jean-Luc Chevillard, Historical Linguistics, Classical Tamil Grammar, Tolkappiyam, Cenavaraiyam,*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

ஆய்வுச்சுருக்கம்

பிரெஞ்சு நாட்டுத் தமிழறிஞர் ழான் லுக் செவ்வியா, தமிழ் இலக்கணம், வரலாற்று மொழியியல் மற்றும் செவ்வியல் இலக்கியங்களில் மேற்கொண்டுள்ள ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்புப் பங்களிப்புகளை இக்கட்டுரை விளக்கி நிற்கிறது. தொல்காப்பியச் சொல்லதிகாரம் மற்றும் சேனாவரையர் உரை ஆகிய்வற்றினை நுட்பமாக ஆய்வு செய்ததன் மூலமே செவ்வியாரின் ஆய்வுப்பங்களிப்பு, தமிழ்ச்செவ்விலக்கணத்தை நோக்கித் திரும்பியது. நவீன மேலைநாட்டு மொழியியல் கோட்பாடுகள், வரலாற்று மொழியியல் மற்றும் ஒப்பீட்டு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி, சுட்டுச் சொற்கள் (Deixis), ஒலியாட்டச் சொற்கள் (Ideophones), திசைச்சொல், எழுத்ததிகாரம் மற்றும் தமிழ் யாப்பியல் (செய்யுளியல்) உள்ளிட்ட முதன்மையான இலக்கணக் கூறுகளைச் செவ்வியார் பகுப்பாய்வு செய்துள்ளார். இவரின் இத்தகையப் பன்முக ஆய்வு அணுகுமுறையானது, பாரம்பரிய இந்திய உரைமரபுகளையும் பன்னாட்டு மொழியியல் கோட்பாடுகளையும் இணைத்து, தமிழியல் ஆய்வுகளுக்குப் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சியது. சர்வதேச கல்வி – ஆய்வு சார்ந்த தளங்களில் தமிழ்ச்செவ்வியல் ஆய்வுகளை முன்நகர்த்துவதில் செவ்வியாரின் முக்கியப் பங்கினை வெளிச்சமிட்டுக் காட்டுவதையும், கலைஞர் கருணாநிதி விருது உள்ளிட்ட அவர் பெற்ற சிறப்புகளைச் சுட்டுவதாகவும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

திறவு சொற்கள் : ழான் லுக் செவ்வியார், வரலாற்று மொழியியல், தமிழ்ச் செவ்விலக்கணம், தொல்காப்பியம், சேனாவரையம்.

அறிமுகம்

தமிழ் ஆய்வுகளில் மேலைநாட்டு அறிஞர்கள் பங்கெடுத்தமை என்பது தமிழாய்வியல் வரலாற்றில் முக்கியமான பகுதியாகும். ஒப்பியல், மொழிபெயர்ப்பியல், அகராதி உருவாக்கம், சுவடி எண்ணிமவாக்கம், அகழாய்வு எனப் பலவகையான களங்களில் தமிழாய்வின் பரப்பை விரிவாக்கியமைக்கு மேலை அறிஞர்களின் பங்களிப்பு அளப்பரியது. இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, கலாச்சார மாற்றங்கள், கல்வியியல் மற்றும் ஆய்வியல் துறைகளில் மிகப்பெரிய திருப்பங்களை உருவாக்கின. 19-20ஆம் நூற்றாண்டுகளில் உருப்பெற்ற நவீனத்துவத்தின் வளர்ச்சியில் கூர்செய்யப்பட்ட தேசியஇனக் கருத்தியலானது மொழி, பண்பாடு உள்ளிட்ட அடையாள மீட்சி ஆய்வுகளைத் தனித்தன்மை காத்தல் எனும் வகையில் மேற்கொள்ள ஊக்குவிப்பாக இருந்தது. இதன் விளைவாகப் பல ஆய்வாளர்கள் தமிழாய்வுச் சூழலில் உருப்பெற ஆரம்பித்தனர்.

இத்தகு தமிழச்சூழலில் உருவான தமிழாய்வுகள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களால் நிகழ்த்தப்படுவதற்கும், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் தமிழ் மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைக் கற்றறிந்து நிகழ்த்திவருவதற்கும் இடையில் பல்வேறு

| Copyright © Author(s)

வேறுபாடுகளைப் பட்டியலிட முடியும். அவற்றில் ஒன்றாக, பன்முகப்பட்ட ஆய்வு அணுகலைக் குறிப்பிடலாம். அயலக அறிஞர்களின் வருகையும் அவர்களது தமிழாய்வியல் பணிகளும், இருபதாம் நூற்றாண்டின் பன்னோக்குத் தமிழாய்வியல் உருவாவதற்குத் தூண்டுகோளாய் அமைந்தன என்பதை மறுக்க இயலாது. இதுகாறும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தால் நடத்தப்பெற்ற உலகத் தமிழ் மாநாடுகளும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத மேலைப்புலம் உள்ளிட்ட அயலகத் தமிழறிஞர்களின் ஆய்வுப் பங்களிப்புடனே வெற்றிபெற்றிருக்கின்றன. குறிப்பாக ஜீன் பிலியோசா, கூய்ப்பர், நொபுரு கரஷிமா, ஆஸர், கமில் சுவலபில், எமினோ, பர்ரோ போன்றோர் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் முக்கியப் பொறுப்புகளில் இருந்து ஆய்வு நோக்கத்தினை முதன்மைப்படுத்தித் தமிழாய்வுகளை உலக அரங்கிற்குக் கொண்டுசென்றனர் என்பது நினைவுகூரத்தக்கதாகும்.

அத்தகு தமிழ் அறிஞர்களின் தமிழாய்வியல் பங்களிப்புத் தொடர்ச்சியில் தனித்த ஆய்வுகள் மூலம் தமிழ்ச் செவ்வியலின் விவாதப்போக்கை அடுத்தக்கட்டத்திற்குக் கொண்டு சென்றவர்களாக கமில் சுவலபில், பிரான்சுவா குரோ, அலெக்ஸாண்டர் துபியான்ஸ்கி, அஸ்கோ பார்ப்போலா, ஜார்ஜ் எல். ஹார்ட் என நீளும் பட்டியலில் தமிழ்ச் செவ்வியல் பரப்பையும், சைவ இலக்கியங்களைப் பிரிதொரு பரப்பாகவும் எடுத்துக்கொண்டு இயங்கிவருபவர்தான் ழான் லுக் செவ்வியார் (Jean-Luc Chevillard). அவரின் தொல்காப்பியம் - சேனாவரையம் தொடர்பான ஆய்வுகள், கணினித் தேவாரச் செயல்திட்டம் உள்ளிட்ட அவரைப் பற்றியோ அல்லது அவரின் பழந்தமிழிலக்கண ஆய்வுகள் பற்றியோ இன்னும் முழுமையாகத் தமிழறிவுச் சமூகம் விவாதிக்கவில்லை என்ற குறை உள்ளது. இந்தத் தருணத்தில்தான் அவரின் பல்வேறு தொடர்ச்சியான தமிழியல் (குறிப்பாகச் செவ்வியல்) பங்களிப்புகளுக்காக 2022-ஆம் ஆண்டிற்கான கலைஞர் கருணாநிதி செம்மொழி விருது அறிவிக்கப்பட்டது. அதிநவீனத்துவமாகியுள்ள தமிழ்ச் செவ்வியல் ஆய்வுப் போக்கில் செவ்வியாரின் காத்திரமான வகிபாகத்தை இச்சூழலில் அறியவேண்டியதும் இன்றியமையாததாகிறது.

தமிழாய்வியலில், 30 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்ற போதிலும், செவ்வியாரின் ஆய்வுகள் அண்மைக் காலத்தில்தான் (கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில்) தமிழகத் தமிழறிஞர்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியிருக்கின்றன. அயலகத் தமிழறிஞர்களின் ஆய்வுப் பங்களிப்புகள் தமிழச்சூழலில் வெகுசிலராலேயே அங்கொன்றும் இங்கொன்றுமாய் அடையாளம் காட்டப்படுகின்றன. கிடைக்கப்பெறுகின்ற அயலகத் தமிழறிஞர்கள் பற்றிய பதிவுகளிலும், ஆய்வு எடுத்தாளுகையிலும் ழான் லுக் செவ்வியார் பற்றிய செய்திகள் மிகச்சிறிய அளவிலேதான் உள்ளன.

வெகுஜனப் பார்வையில் இவரைப் பற்றிய அறிமுகத்தை *The New Indian Express* 2012-இல் "A Frenchman's Love for Tamil Hymns" என்ற தலைப்பில் ஒரு குறிப்பாக வெளியிட்டது. அதற்கு முன்பாக 2010-இல் *The Hindu* இதழ் "Man of Many Words" என்ற தலைப்பில் இவரைப் பற்றிய அறிமுகத்தைச் செய்தது (Sivakumar, 2010; The New Indian Express, 2012).

'உயிர்மை' இதழில் 2010-ஆம் ஆண்டின் நவம்பர் மாத இதழில் நாடாளுமன்ற உறுப்பினர்

பா.இரவிகுமார், செவ்வியார் பற்றிய சில ஆய்வியல் தகவல்களைப் பகிர்ந்திருந்தார். அதில் இன்றைய அயலகத் தமிழாய்வறிஞர்கள் பலரும் குடத்திலிட்ட விளக்காய் இருப்பதனைப் பதிவுசெய்துவிட்டு, செவ்வியார் குறித்துச் சுட்டினார். இதில் "குடத்திலிட்ட விளக்கு" என இவர் விளிக்கும் இலைமறைக்காய் பொருள்தான் இந்தக் கட்டுரையின் நுவல் பொருளாகவும் அதன் தேவையையும் உண்டாக்குவதாகவும் அமைந்திருக்கிறது. இவர் நிறுவனப்படுத்தப்பட்ட ஆய்வுப்பணியில் ஈடுபட்டுவருவதால், தன்னுடைய ஆய்வுகளைப் பதிவேற்றம் செய்கையில் ISNI உள்ளிட்ட ஆய்வாளர்களுக்கான தரவுத் தளங்களைப் பயன்படுத்தி வருகிறார். முன் குறிப்பிட்டது போன்ற கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகாலத்தின் இவரது அறிமுகம் என்பது இத்தகு இணையம் வழியாகப் பரவலாக சாத்தியமாகியிருக்கின்றது.

இந்நிலை இவ்வாறிருக்க, முன்னர் தமிழாய்வுகளில் ஈடுபட்ட எத்தனையோ அயலகத் தமிழறிஞர்களும், அவர்தம் ஆய்வுகளும் கண்ணிற்கெட்டாமலேயே சென்றிருக்கின்றன. எனவே அயலகத் தமிழாய்வுகளை ஒருங்கிணைக்கவேண்டிய தேவை இன்று அதிகளவு எழுந்துள்ளது. குறிப்பாக, இன்றைய சூழலில் தமிழின் செவ்வியல் தகுதி பற்றிய ஆய்வுகள் தவிர்க்க இயலாத நிலையில் இருக்கும்போது, அயலகத் தமிழறிஞர்களின் செவ்வியல் ஆய்வுகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வும் தேவையாக இருக்கின்றது.

ழான் லுக் செவ்வியார்

1956 மார்ச் 23 ஆம் நாளன்று பிரான்ஸ் நாட்டில் பிறந்த செவ்வியார், தமிழாய்வியல் மீதான ஆர்வம் ஏற்படுவதற்கு முன்னர் கணிதவியலிலும் மொழியியலிலும் பட்டப்படிப்புகளைப் பெற்றிருந்தார். பிரான்சில் பட்டப்படிப்பு முடிந்த பின்னர் தேசிய சேவையில் ஈடுபடவேண்டும் என்பது அந்நாட்டு அரசின் விதிமுறையாக இருந்தமையாலும், அதில் அவருக்கு உடன்பாடு இல்லாமையாலும், பிற நாடுகளில் கணித ஆசிரியராகப் பணியாற்றவேண்டும் என்பதற்காகப் பாண்டிச்சேரியைத் தேர்ந்தெடுத்து இந்தியா வந்தார். அப்போது இன்னொரு மொழியைக் கற்கவேண்டிய தேவை இருந்ததன் விளைவாகத் தமிழைக் கற்றுக்கொண்டார் (செவ்வியார், 2023).

கூடவே நன்னூல் நூற்பாக்களையும் அவர்மூலமாகவே அறிந்துகொண்டார். தொல்காப்பியத்தின் மீதான வாசிப்பு வேட்கையால் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் இருந்த முத்துச்சண்முகம் பிள்ளையை அணுகி, கற்க முயன்றார். அவர், செவ்வியாருக்குச் சொல்லதிகாரத்தைப் பயிற்றுவித்தார். அப்படியாக அவருக்குத் தமிழ் இலக்கணம் பயிலும் ஆவல் ஏற்பட்டது. செவ்வியார், தன் இலக்கணம் பயிலும் ஆவலை 'ஆய்வியல்' நிலைக்கு உயர்த்திக்கொண்டார். ஏற்கனவே முதுகலைப் பட்டத்தை நிறைவுசெய்திருந்ததன் விளைவாக, பாரிஸ் பல்கலைக்கழகத்தில் இருந்த École Pratique des Hautes Études (EPHE) என்னும் உயராய்வு மையத்தின் தென்னிந்திய வரலாறும் மொழியியலுக்குமான துறையின் பேராசிரியர், பிரான்சுவா குரோ (François Gros) தலைமையில் தொல்காப்பியம் பற்றிய ஆய்விற்காகப் பதிவு செய்துகொண்டார் (செவ்வியார், 2023). முன்பு பேச்சுத் தமிழ் குறித்த ஆய்வினைத்தான் மேற்கொள்ளவிருந்தார். முத்துச்சண்முகனாரின் வலியுறுத்தலால், செவ்வியல் பக்கம் திரும்பினார்.

முத்துச்சண்முகனார் ஏற்கனவே தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்தை முழுமையாக நடத்தியிருந்ததன் விளைவாக, சொல்லதிகாரத்தையும், சொல்லதிகாரத்திற்கான உரைகளுள் ஒன்றான 'சேனாவரையர்' உரையையும் தன் ஆய்வுப் பரப்பிற்கு எடுத்துக்கொண்டு கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் தன் ஆய்வை நடத்தினார். இவர் கணித ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே பகுதி நேரமாகச் சிலகாலம் இந்த ஆய்வைச் செய்தார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

1991-ஆம் ஆண்டு முதல் École française d'Extrême-Orient (EFEO) நிறுவனத்தில் பணி வாய்ப்பைப் பெற்று முழுநேரமாக மொழியியல் ஆய்வுகளை மேற்கொண்டார். "Sur la métalangue grammaticale des maîtres commentateurs tamouls médiévaux" என்ற தலைப்பில், சேனாவரையம் - தொல்காப்பியம் குறித்த தன் முனைவர்பட்ட ஆய்வறிக்கையைப் பிரெஞ்சு மொழியில் எழுதி முடித்தார். இதனை (முதற்பாகம் மட்டும்) 1996-ஆம் ஆண்டு École française d'Extrême-Orient (EFEO) மற்றும் French Institute of Pondicherry (IFP) ஆகியவை இணைந்து வெளியிட்டன (செவ்வியார், 2023). இந்நூலைத் திருத்தம் செய்து, நெறிப்படுத்தியவர் பெரும்பேராசிரியர் தி.வே. கோபாலையர் என்பது குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

2008ஆம் ஆண்டில் இந்நூலின் இரண்டாம் பாகம் வெளியானது (Chevillard, 2008a). இப்பணிகளையெல்லாம் முடித்தபின்னர், இறுதியாக CNRS என்னும் பிரெஞ்சு தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தில் ஆய்வுப் பணியாற்ற அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. தமிழ் இலக்கண மொழியியல் ஆய்வினை ஒருபுறமும், மொழித் தோற்றம் பற்றிய பிரிதொரு ஆய்வினையும் தற்போது செய்து வருகிறார் (செவ்வியார், 2023).

தொல்காப்பியச் சொல்லதிகாரம் -சேனாவரையத்தை ஆய்வுப் புலமாக எடுத்துக்கொண்டதுமுதலே தன் நெறியாளர் பேராசிரியர் பிரான்சுவா குரோவைப் போலவே தமிழ் பிரெஞ்சு மொழிகளுக்கிடையே மொழிபெயர்ப்புப் பணியையும் மேற்கொள்ளத் தொடங்கினார். குரோ, பாண்டிச்சேரி பிரெஞ்சு நிறுவனத்தில் இருந்தபோது பரிபாடல், திருக்குறள், காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் ஆகியவற்றைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்திருந்தார் (சவேரியர், 2016). இவரைப் பின்பற்றி சேனாவரையத்தைப் பிரெஞ்சு மொழியில் செவ்வியார் மொழிபெயர்த்தார். இவரைப் போலவே, இவரின் மனைவி திருமதி. ஈவா வில்டன், ஜெர்மனியிலுள்ள ஹம்பர்க் பல்கலைக்கழகத்தில் தமிழ் - சமஸ்கிருதப் பேராசிரியராகவும் சுவடியியல் ஆய்வறிஞராகவும் திகழ்ந்து வருகின்றமை சுட்டத்தக்கது.

தமிழ்ச்செவ்வியல் ஆய்வுகள்

செவ்வியாரின் தமிழ்ச்செவ்விலக்கண ஆய்வுகள் பெரும்பாலும் மேலை மொழியியல் கோட்பாட்டின் வழி நிகழ்த்தப்பட்டதாகவே அமைந்துள்ளன. குறிப்பாகத் தமிழ் மரபிலக்கணம் பற்றிய பார்வையை 'வரலாற்று மொழியியல்' (Historical Linguistics) அணுகுமுறையிலேயே வைத்திருந்தமையையும் அவரது ஆய்வுகளைக் கண்ணுறும்போது அறியமுடியும். மேலும் செவ்விலக்கியங்களுக்குச் செவ்விலக்கண ஆக்கம், கோட்பாடு ஆகியவற்றின்

இன்றியமையாமையைச் செவ்வியாரின் ஆய்வுகள் வழி அறிய முடியும்.

1991ஆம் ஆண்டு *Histoire Épistemologie Langage* ஆய்விதழில் "Terminologie transparente et formalisme caché" (Transparent terminology and hidden formalism) என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டார் (Chevillard, 1991). பழந்தமிழ் இலக்கியங்களை (கவிதைகளை) மொழிபெயர்க்கும்போது ஏற்படும் இலக்கணச் சிக்கல்களையும், அதோடு செவ்விலக்கண முறைமைகள் பற்றியும் விரிவாக எழுதியிருக்கிறார். முன்குறிப்பிட்ட *Histoire Épistemologie Langage* இதழிலேயே பெயரடை (Adjective clause) பற்றி "Sur l'adjectif dans la tradition grammaticale tamoule" (On the adjective in the Tamil grammatical tradition) என்ற தலைப்பில் 1992-ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டார் (Chevillard, 1992). இந்தக் கட்டுரையில், பெயரடைகளைத் தனித்த உருபனாகத் தமிழ் இலக்கண மரபு அங்கீகரிக்காத நிலையைக் குறிப்பிடும் செவ்வியார் அதற்கான பிரச்சினைகளையும் பட்டியலிட்டுக் காண்பிக்கின்றார்.

வீரமாமுனிவரின் தமிழியல் பணிகளை, குறிப்பாக இலக்கண உருவாக்கம், அகராதி உருவாக்கம், இலக்கண ஆய்வு ஆகியவற்றை அடையாளப்படுத்தும் ஆய்வுகளை உள்ளடக்கிய மேலை அறிஞர்களின் மொழியியல் பணிகளைச் சேகரிக்கும் பணியையும் செவ்வியார் செய்துள்ளார். தமிழின் சிறப்பான இலக்கணக்கூறுகளுள் ஒன்றான குறிப்புவினையை வீரமாமுனிவர் ஆய்ந்த முறை பற்றி "Beschi, grammairien du tamoul, et l'origine de la notion de verbe appellatif" (Beschi, Tamil grammarian, and the origin of the notion of appellative verb) என்ற தலைப்பில் ஆய்வறிக்கை எழுதினார் (Chevillard, 1992). வீரமாமுனிவரின் இலக்கணப் பணிகளைத் தொகுத்துச் சொல்லி, குறிப்பு வினை பற்றியும், அவர் காலத்திய மொழி இலக்கணச் சூழல் பற்றியும் ஆராய்கிறார். மேலும், வீரமாமுனிவர் இலத்தீனைத் தாய்மொழியாகக் கொண்டவராதலின், இலத்தீன் இலக்கண மரபுடன் தமிழ் மரபை வீரமாமுனிவர் நோக்கியதையும் செவ்வியார் குறிப்பிடுகிறார். குறிப்பு வினை முதலாய இலக்கணக் கூறுகள் வழி வீரமாமுனிவர் மேற்கொண்ட இலக்கணச் சீரமைப்பைப் பற்றியும் தமிழக இலக்கண மரபுகளோடு அவற்றைப்பொருத்திப் பார்க்க முனைவதாகவும் அவ்வறிக்கையைச் செவ்வியார் அமைத்துள்ளார்.

தமிழில் செவ்விலக்கண மரபு தொல்காப்பியத்தை அடியொற்றி நீண்டு வருவதைச் செவ்வியார் உணர்ந்ததன் விளைவாக, Deixis (சுட்டுகள்) என்னும் மொழியியல் பகுப்பில் உள்ள சொற்கள் பற்றி விரிவாக "Le vocabulaire de la deixis dans la tradition grammaticale tamoule" (The vocabulary of deixis in the Tamil grammatical tradition) என்னும் தலைப்பில் ஆராய்ந்திருக்கிறார் (Chevillard, 1998). சுட்டுச் சொற்களைப் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை மூலங்களாகக் கொண்டு நவீன மொழியியல் கருத்துகளோடு இணைத்து செவ்வியார் ஆராய்ந்திருக்கிறார். மேலும் சமஸ்கிருத சுட்டுகளோடும் பழந்தமிழ்ச்சுட்டுகளை ஒப்பிட்டு ஆராய்ந்திருக்கிறார். தமிழ் இலக்கண மரபில் கையாளப்படும் சொற்கள், குறிப்பாகச் செவ்விலக்கியங்களில் கோட்பாடாகக் காணப்படும் சொற்களுக்கும் அவற்றின்

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.10

பயன்பாட்டிற்குமான தொடர்பு மற்றும் இன்றைய அவற்றின் தொடர் பயனாக்கம் பற்றிய நெடிய கட்டுரையை "Les mots dans la tradition tamoule classique" (Words in the Classical Tamil Tradition) என்னும் தலைப்பில் எழுதியுள்ளார் (Chevillard, 2002).

பழந்தமிழ் இலக்கியச் சொற்கள் இன்றளவும் சில வழங்கிவரினும் அதனுடைய பயன்பாடு, சொற்பொருள் மாற்றம், இலக்கணப் பயன்பாட்டில் காலந்தோறும் ஏற்படும் மாற்றம் ஆகியவற்றை வரலாற்று மொழியியல் கருத்தோடு தொடர்புபடுத்தி ஆய்ந்துள்ளார். பழந்தமிழ்க் கவிதையிலிருந்து அடுத்தடுத்த இலக்கண ஆக்கங்கள் கடன் பெறல், சொற்களுக்கான பொருள் மற்றும் மதிப்புகளுக்கான மாற்றம் அல்லது இழப்பு, பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்களுக்குப் பின்னாளில் எழுந்த உரைமரபுகளில் குறிப்பிடப்படும் சொற்களும் அவற்றிற்கான மதிப்பீடுகளும், இவையன்றி தமிழில் உள்ள மரபுச்சொற்கள் / மரபுத்தொடர்கள் (Idioms) ஆகியவற்றிற்கு அகராதிகள் தரும் விளக்கங்கள் எனத் தமிழ் இலக்கண மரபின் செவ்வியத் தொடர்ச்சியைப் பல நிலைகளில் இதில் ஆய்ந்திருக்கின்றார்.

உலகளவில் Ideophones பற்றிய மொழியியல் ஆய்வுகள் மொழியின் தனித்த வழக்குகளை இனங்காண உதவுகின்றன. Ideophones என்பவை மனதில் எழும் எண்ணங்களுக்கான நுணுக்கமான உருபன்கள். தமிழில், சொரசொர, பளபள, கிடுகிடு போன்ற இரட்டைக் கிளவிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். "Ideophone, A member of an open lexical class of marked words that depict sensory imagery" (Dingemanse, 2010, p. 16) என்று மார்க் டிங்கெமன்சே (Mark Dingemanse) உளவியல் ரீதியாகப் பொருள்படுத்துகிறார். செவ்வியார் "Ideophones in Tamil: Historical observations on the morphology of X-enal expressives" என்பதில் இதைப் பற்றி ஆய்வு செய்திருக்கிறார் (Chevillard, 2001). நவீனத் தமிழில் வழங்கப்படக்கூடிய இவ்வகை நுணுக்கமாக ஒலிக்கும் சொற்கள் சிலவற்றின் தொடர்ச்சி பழந்தமிழிலிருந்து, அதாவது தமிழ்ச் செவ்வியல் இலக்கண, இலக்கியங்களிலிருந்து நிகழ்ந்துவருவதைச் சுட்டிக்காட்டி, அதற்குச் சமூகத்தின் உளவியல் ரீதியான தாக்கங்கள் காரணமென்று நிறுவுகிறார்.

முத்துச்சண்முகனாரின் வலியுறுத்தலால் பேச்சுத்தமிழ் பக்கம் தனது ஆய்வை நிகழ்த்தமுடியாமலிருந்த செவ்வியார், பேச்சுத்தமிழின் செவ்விலக்கியக்கால வடிவங்களுள் ஒன்றான திசைச்சொல் பற்றிய ஆய்வை மேற்கொண்டார். "The concept of ticai-c-col in Tamil grammatical literature and the regional diversity of Tamil classical literature" என்னும் தலைப்பில் தொல்காப்பியம் முதல் நன்னூல், வீரசோழியம், நிகண்டுகள் வரையிலான திசைச்சொல் பற்றிய செய்திகளைத் தொகுத்து ஆராய்ந்துள்ளார் (Chevillard, 2008). செந்தமிழ் நாடுகள் பன்னிரண்டில் வழங்கும் திசைச்சொற்களுக்கான இலக்கியச் சான்றுகளையும் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

ஒலியியல் மற்றும் ஒலியனியல் பற்றிய இலக்கணப் பிரதியாக்கம் என்பது தமிழ் போன்ற

குறிப்பிட்ட சில மொழிகளில் மட்டுமே காணக்கூடியதாக இருக்கிறது. வடமொழியில் சொல் இலக்கணத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது (உருபன், தொடர், பொருண்மை). ஆனால் தமிழில் சொல்லிலக்கணத்துக்கு இணையாக எழுத்திலக்கணத்திற்கும் (ஒலி, ஒலியன்) ஆய்வுரீதியான மதிப்பளிக்கப்படுகின்றது. குறிப்பாகப் பிறப்பியல் பற்றிய சிந்தனை பிற மொழியிலக்கணப் பிரதிகளில் பெரிதாகப் பகுப்பு செய்யப்படாத ஒன்றாகும். இவ்வகையான தனித்த பகுப்புச் சிறப்புகளைப் பற்றி, "A tree-guided tour of the Eluttatikāram" என்னும் தலைப்பில் கட்டுரை வெளியிட்டார் (Chevillard, 2010).

தொல்காப்பியத்தில் தமிழின் எழுத்தியல் ஆய்வுகள் எவ்வாறு ஏற்படுத்தப்பட்டன என்பதை அறிவது கடினமான பணி எனக் கூறிவிட்டு, அதன் தொடக்கமாக, உலகளாவிய பொதுவான மொழியியல் (ஒலி, ஒலியன்) கோட்பாடுகளோடு தொல்காப்பிய எழுத்ததிகாரம் பொருந்துகிறது என்பது பற்றிய ஆய்வுகளை இக்கட்டுரையில் செவ்வியார் நிகழ்த்துகிறார் (Chevillard, 2010). இதில் மொழிக்கு இலக்கணம் அமைக்கும் பாங்கினைத் தொல்காப்பியர் கையாண்ட பகுப்புகளைப் போல, அவரைத் தொடர்ந்த இலக்கணிகள் ஏற்படுத்தவில்லை என்பதையும்; பிற்கால மொழி மாற்றம் மக்கள் பேச்சு வழக்கோடு இலக்கிய மாற்றமும் அடைந்ததால் எழுத்தியல் மாற்றமும் அவ்வக்கால நிலைக்கேற்ப மாற்றமடைந்ததையும் விளக்கிச் செல்கிறார்.

ஐரோப்பியர்கள் தமிழகத்தில் அகராதிகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்பாகவே தொல்காப்பியத்தில் உரியியல், நிகண்டுகள் ஆகியன அந்த இடத்தை நிரப்பியிருந்தன. ஆனால் அதில் சொற்கள் பெரிய எண்ணிக்கையில் இல்லை. நிகண்டுகள் எழுந்ததற்கான தேவையும், முன்மாதிரியமைப்பும் தொல்காப்பிய உரியியலில் இருந்து உருப்பெற்றிருக்கக்கூடும் என்னும் கருதுகோளை வைத்து, செவ்வியார் "'Rare words' in classical Tamil literature: From the Uriyiyal to the Tivākaram" என்ற கட்டுரையை 2010-இல் நிகழ்த்தியிருந்தார் (Chevillard, 2010).

தொல்காப்பியத்தில் உள்ள 120 உரிச்சொற்களின் பகுப்பானது தமிழின் முதல் அகராதி முயற்சியெனக் கூறும் செவ்வியார், தமிழின் முதல் நிகண்டான பொ.ஆ. 8-9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திவாகர நிகண்டு ஏனைய நிகண்டுகளுக்கெல்லாம் முன்னோடி (சண்முகம் பிள்ளை & சுந்தரமூர்த்தி, 1990, ப. xi) என்பதை அறிந்து, தொல்காப்பியம் இதற்கான முன்னோடி என்பதைத் தொல்காப்பியம் கூறும் உரியியலின் 120 அரிய சொற்களைக் கொண்டு நிறுவியுள்ளார்.

தமிழ் மரபிலக்கணம் எழுத்து, சொல் ஆகியவற்றுடன் மட்டும் தனது ஆய்வை நிறுத்தாமல், யாப்பிற்குள்ளும் செலுத்தியுள்ளார். குறிப்பாகச் செவ்விலக்கணப் பிரதியான தொல்காப்பியத்திலுள்ள யாப்பியல் பற்றிய சிந்தனையையும் அவர் விரிவாக ஆராய்கிறார். 2011-ஆம் ஆண்டு வெளியிட்ட "On Tamil poetical compositions and their 'limbs', as described by Tamil grammarians (Studies in Tamil metrics-1)" என்ற கட்டுரையில் தமிழ் யாப்பிலக்கண உறுப்புகள் (limbs) இருபத்தினான்கின் இன்றியமையாமையைப் பட்டியலிடுகின்றார் (Chevillard, 2011). சொல் பகுப்பாய்வு பற்றிய மொழியியல் ஆய்வுக்குத் தமிழில் வழங்கும் இவ்வுறுப்புகள் தனித்த

மற்றும் முக்கிய இடம் வகிப்பதாக இக்கட்டுரையில் தெரிவிக்கின்றார்.

2014 வாக்கில் தொல்காப்பியச் செய்யுளியல் உரையாசிரியர்களின் கருத்து வேறுபாடுகள் குறித்து "Codifying beauty: on the differences of interpretation between traditional commentators concerning the last eight 'Limbs of Poetry' ([ceyyul-uruppu]) in the Ceyyuliyal of the Tolkāppiyam" என்னும் தலைப்பில் ஆய்வு நிகழ்த்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது (Chevillard, 2014).

வரலாற்று மொழியியலைப் பெரும்பாலும் தொல்காப்பியப் பிரதி ஆய்வில் பயன்படுத்திப் பல கட்டுரைகளை இயற்றியுள்ளமையைப் போன்றே சமூக மொழியியலையும் பயன்படுத்தியிருக்கிறார். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகியனவற்றைத் தொல்காப்பியப் பிரதியின் வழி ஆராய்கின்றபொழுதில், வடமொழி இலக்கண மரபின் செய்திகளோடு அவற்றை விரித்துப் பார்க்கும் மொழியியலாய்வையும் "On the Two Lists of 'Four [Types Of] Words' (Nar-col) in the Śāstric Descriptions of Tamil" என்னும் தலைப்பில் நிகழ்த்தியிருக்கிறார் (Chevillard, 2013). வடசொல், திசைச்சொல் ஆகியவற்றின் உட்கூறுகள் வடமொழியின் தவிர்ப்பின்மையை உணர்த்துகின்றன என்று எண்ணியபடியால் இவ்வகை ஆய்வைச் செய்தார். அதே நேரம் வடமொழி மூலத்திற்குச் சற்றும் தொடர்பில்லாத தமிழின் தனித்த இருமை வழக்கு பற்றியும் சமூக, வரலாற்று மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்திருக்கிறார். மேலும் தமிழ் இலக்கண மரபின் கோட்பாட்டு மொழிக்கருத்தையும் (Theoretical linguistics) அவை பயன்படுத்தப்பெறும் பயனாக்க மொழிவகையினையும் (Applied linguistics) தொடர்புபடுத்தி "The Tamil grammatical tradition: a long commute between theory and practice" என்ற தலைப்பில் 2012-இல் ஆய்வு வெளியிட்டார் (Chevillard, 2012) என்பது சுட்டத்தக்கது.

நிறைவுரை

செவ்வியாரின் தமிழ்ச்செவ்விலக்கண ஆய்வுகள் பற்றிய தொடக்கக்கால ஆய்வுகள் மற்றும் அவற்றின் மூலம் வெளிப்படும் தமிழ்ச்செவ்வியலின் முக்கியமான போக்குகளையும் இனங்காணும் நோக்கில் இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது. பிரான்சுவா குரோவின் நெறிகாட்டலில் தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையத்தை ஆராய்ந்ததன் விளைவாகத் தமிழின் மொழியியல் மரபினை மேலை மொழியியல் கோட்பாடுகளின் வழி விளக்கும் பணிகளைச் செய்துள்ளமையை இக்கட்டுரை பதிவு செய்கிறது. தமிழ்ச்செவ்விலக்கண மரபை அகராதியியல், இருமை வழக்கு, கோட்பாட்டு மற்றும் பயனாக்க மொழியியல், செந்தமிழ் நடை, வடமொழிச் சொல்லிலக்கணக் கோட்பாடு மற்றும் இலத்தீன் மொழிக்கோட்பாடுகளோடு ஒப்பிடுதல் என முக்கியமான ஆய்வுப் பங்களிப்புகளைச் செய்துள்ளார். இன்றைய காலத்தில் சைவம் உள்ளிட்டவற்றிலும் ஆய்வுகள் செய்து வருகின்றார். தமிழ் ஆய்வியல் வரலாற்றில் செவ்வியாரின் தாக்கமானது பிரெஞ்சு தமிழ் மொழி ஆய்வறிஞர்களிடையேயான கூட்டு முயற்சியின் புதிய பரிணாமமாகப் பார்க்கும் அளவிற்கு, தி.வே.கோபாலையர், முத்துச்சண்முகனார் முதலானோரின் வழிகாட்டலோடு தமிழ்ச்செவ்விலக்கண ஆய்வுகளைச் செய்துள்ளார்.

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.10

துணைநூல் பட்டியல்

[1.] சண்முகம் பிள்ளை, மு., & சுந்தரமூர்த்தி, இ. (பதிப்பு). (1990). திவாகரம் (முதற்றொகுதி). சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை.

[2.] சவேரியர், எம்.ஏ. (2016). *மேலைநாட்டறிஞர்களின் தமிழ்த்தொண்டு*. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

[3.] செவ்வியார், ழான் லுக். (2023, ஏப்ரல் 4). *இணையவழி நேர்காணல்*.

[4.] Chevillard, J.-L. (1991). Terminologie transparente et formalisme caché. *Histoire Épistémologie Langage*, 13(2), 71-83.

[5.] Chevillard, J.L. (1992). Beschi, grammairien du tamoul, et l'origine de la notion de verbe appellatif. *Bulletin de l'École Française d'Extrême-Orient*, 79(1), 77-88.

[6.] Chevillard, J.L. (1992). Sur l'adjectif dans la tradition grammaticale tamoule. *Histoire Épistémologie Langage*, 14(1), 37-58.

[7.] Chevillard, J.L. (1996). *Le commentaire de Cēnāvaraiyar sur le Collatikāram du Tolkāppiyam: Sur la métalangue grammaticale des maîtres commentateurs tamouls médiévaux* (Vol. 1). Institut Français de Pondichéry / École Française d'Extrême-Orient.

[8.] Chevillard, J.L. (1998). Le vocabulaire de la deixis dans la tradition grammaticale tamoule. *Histoire Épistémologie Langage*, 20(2), 77-92.

[9.] Chevillard, J.L. (2001). Ideophones in Tamil: Historical observations on the morphology of X-enal expressives. In F. K. E. Voeltz & C. Kilian-Hatz (Eds.), *Ideophones* (pp. 63-85). John Benjamins Publishing.

[10.] Chevillard, J.L. (2002). Les mots dans la tradition tamoule classique. *Histoire Épistémologie Langage*, 24(2), 11-32.

[11.] Chevillard, J.L. (2008). *Le commentaire de Cēnāvaraiyar sur le Collatikāram du Tolkāppiyam: Sur la métalangue grammaticale des maîtres commentateurs tamouls médiévaux* (Vol. 2). Institut Français de Pondichéry / École Française d'Extrême-Orient.

[12.] Chevillard, J.L. (2008b). The concept of ticai-c-col in Tamil grammatical literature and the regional diversity of Tamil classical literature. *Monde Indien*.

[13.] Chevillard, J.L. (2010). A tree-guided tour of the Eluttatikāram. In *Proceedings of the International Workshop on Tamil Epigraphy and Linguistics*.

[14.] Chevillard, J.L. (2010). 'Rare words' in classical Tamil literature: From the Uriyiyal to the Tivākaram. *Acta Orientalia*, 63(3), 273-288.

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.10

[15.] Chevillard, J.L. (2011). On Tamil poetical compositions and their 'limbs', as described by Tamil grammarians (Studies in Tamil metrics-1). *Histoire Épistémologie Langage*, 33(2), 123-146.

[16.] Chevillard, J.L. (2012). The Tamil grammatical tradition: A long commute between theory and practice. In *Theoretical Linguistics and Grammatical Description of South Asian Languages*.

[17.] Chevillard, J.L. (2013). On the two lists of 'four [types of] words' (Nār-col) in the Śāstric descriptions of Tamil. *Lingua Posnaniensis*, 55(2), 47-68.

[18.] Chevillard, J.-L. (2014). Codifying beauty: On the differences of interpretation between traditional commentators concerning the last eight 'Limbs of Poetry' (ceyyul-uruppu) in the Ceyyuliyal of the Tolkāppiyam. In *Studies in Tamil Humanities*.

[19.] Dingemanse, M. (2010). Folk definitions of ideophones. In E. Norcliffe & N. J. Enfield (Eds.), *Field Manual* (Vol. 13, pp. 24-29). Max Planck Institute for Psycholinguistics.

[20.] Sivakumar, A. (2010, December 17). Man of many words. *The Hindu*.

[21.] The New Indian Express. (2012, July 23). A Frenchman's love for Tamil hymns. *The New Indian Express*.

நன்றியுரை

இவ்வாய்வுக்கட்டுரை உருவாக்கத்திற்கு உறுதுணை வழங்கிய ழான் ஊயிக் செவ்வியார் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் என் நன்றி.

Conflicts of Interest: இக்கட்டுரையை வெளியிடுவதில் எவ்விதமான முரண்பாடுகளும் இல்லை என்று உறுதி அளிக்கிறேன்.

Financial Support: இவ்வாய்வுக்காக எவ்வித நிதியுதவியும் பெறப்படவில்லை.

(ழான் லுக் செவ்வியார்)

Tamilmanam

| Copyright © Author(s)

Article DOI: https://doi.org/10.63300/tm12042026.10



சேனாவரையத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு



செவ்வியாரின் தமிழாய்வுப்பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையில் புதுச்சேரி பிரெஞ்சுக் கழகம் 2026இல் வெளியிட்ட நூல்